உ

சிவமயம்.

# புதுவயல்
# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்
## பதிநான்காவதாண்டு
# அறிக்கை.



விடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மைகொள்ள வழியிவை கண்டீர்

தாது ஆண்டு சித்திரைத்திங்கள் ௭-ம் நாள்


1936.

# ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியவர்கள்.

| | |
|---|---|
| முதலாவதாண்டு | பிர்மஸ்ரீ எ. வி. சேஷகிரி சாஸ்திரி அவர்கள், கண்டனூர். |
| இரண்டாவதாண்டு | திருவாளர் தெ. அரு. சித.: இராமநாதன் செட்டியாரவர்கள், கண்டனூர் |
| மூன்றாவதாண்டு | குமரன் ஆசிரியர் திருவாளர் சொ. முருகப்பா அவர்கள், காரைக்குடி. |
| நான்காவதாண்டு | திருவாளர் பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியாரவர்கள், காந்திநகர். |
| ஐந்தாவதாண்டு | திருவாளர் சா. லெ. செட்டியப்பச் செட்டியாரவர்கள், காரைக்குடி. |
| ஆறாவதாண்டு | தேவகோட்டை டிஸ்டிரிக்ட் முன்சிப் டி. கோமதிநாயகம்பிள்ளை அவர்கள் B.A., B.L. |
| ஏழாவதாண்டு | புதுக்கோட்டை மாஜி கல்வி இலாக்காத் தலைவர் B. V. சங்கரராமேஸ்வர ஐயர் அவர்கள் B.A., |
| எட்டாவதாண்டு | தேசபக்தர் பொ. திரிகூடசுந்தரம்பிள்ளை அவர்கள் M.A., B.L., திருநெல்வேலி. |
| ஒன்பதாவதாண்டு | அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. R P. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L., திருநெல்வேலி. |
| பத்தாவதாண்டு | T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் M.A., B.L., M.L.C. திருச்சி. |
| பதினோராவதாண்டு | உயர்தர நீதிமன்றத்து வழக்கறிஞர் திரு. S. சோமசுந்தர பாரதி அவர்கள் M.A., B.L., மதுரை. |
| பன்னிரண்டாவதாண்டு | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A., B.L. கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர், தஞ்சை. |
| பதின்மூன்றாவதாண்டு | தூத்துக்குடி தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள். |



காரைக்குடியில் நடைபெற்ற 37-வது தமிழ் மாகாண அரசியல் மகாநாட்டிற்குச் சென்று தொண்டாற்றிய புதுவயல் ஸ்ரீசரஸ்வதி வித்தியாசாலை பெண் தொண்டர்கள்.



ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் மூன்றாவது ஆண்டு ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும்.

உ
சிவமயம்

# புதுவயல்
# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்
## பதிநான்காவதாண்டு
# அறிக்கை.

அன்பிற் சிறந்த அவைத் தலைவரவர்களே!
செந்தமிழ்ச் செல்வர்களே!
செல்விகளே!

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நமது சங்கம் துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் ௯-ம் நாள் (24—7—1922)ல் நிறுவப்பெற்று இதன் முக்கிய கொள்கைகளான இளைஞர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, கதர் அபிவிர்த்தி, ஜீவகாருண்யம் ஆகியவற்றின் வளர்ச்சி கருதி பதினான்கு ஆண்டுகளாகத் தொண்டாற்றி வந்துளது. இன்று அதற்குப் பதினைந்தாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

தலைவர், திருவாளர். வீர. பழ. வினைதீர்த்தான்

காரியதரிசி ,, { சித. இராமசாமி (புவ ஆடி ௫ வரை) சா. சிதம்பரம். }

## அங்கத்தினர்கள்.

1 திருவாளர் சா. சிதம்பரம் செட்டியார்
2 ,, பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார்.
3 ,, சித. இராமசாமி செட்டியார்.
4 ,, வடு. மு. ராம. பழ. இராமநாதன் செட்டியார்
5 ,, வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார்
6 ,, வீர. பழனியப்ப செட்டியார்
7 ,, ராம. சுப. அடைக்கப்ப செட்டியார்
8 ,, வீர. சோலையப்ப செட்டியார் (டேரியா)
9 ,, வீர. பழ. விருத்தகிரி செட்டியார்
10 ,, பழ. ப ப. வீரப்ப செட்டியார்
11 ,, மெ. கரு. அண்ணமலை செட்டியார் (பினங்கு)
12 ,, அ. நாகப்ப செட்டியார் (பாசியன்)
13 ,, அ. மு சித. முத்தையா செட்டியார்
14 ,, அ. சு. பழ. சு. சோம. இராமநாதன் செட்டியார், (மீன்லா)
15 ,, சா. காசிச் செட்டியார்
16 ,, மு. மு. அழ. அழகப்ப செட்டியார் (மோபி)
17 ,, பெ ப. வி அரு. இராமசாமி செட்டியார்
18 ,, பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார்
19 ,, அரு. ப. மு. வீர. அண்ணமலை செட்டியார்
20 ,, எ. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்ப செட்டியார் (ரெங்கோன்)
21 ,, வீர. இராமநாதன் செட்டியார்
22 ,, கா. குழ. ராம. வீர. இராமசாமி செட்டியார்
23 ,, லெ. இராமநாதன் செட்டியார்
24 ,, பெ. க. வீர. நாராயணன் செட்டியார், (பீக்தசா)
25 ,, வீர. அழ. அழகப்ப செட்டியார்

26 திருவாளர் ராம. வீர. ராமசாமி செட்டியார் (கொழும்பு)
27 ,, அ. அழ. அண்ணாமலை செட்டியார்
28 ,, ப. செ. பழ. சே. பழனியப்ப செட்டியார்
29 ,, ப. வடு. பெரி. ராம. கா. அருணாசலம் செட்டியார்
30 ,, மெ. நடேசன் செட்டியார்
31 ,, சோம. தியாகராஜன் செட்டியார்
32 ,, அழ. குப. சுப. வீரப்பசெட்டியார், (மவுஞ்சவுட்டான்)
33 ,, ப. பெ. அரு. ராம. பழ. அருணாசலம் செட்டியார்
34 ,, மு. ராம. ராமநாதன் செட்டியார்
35 ,, எ. அ. ப. வீர. பழனியப்ப செட்டியார்
36 ,, உ. ராம. பெ. ராம. காசிச்செட்டியார்
37 ,, சித. ராம. குமரப்ப செட்டியார்
38 ,, எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார்
39 ,, செ. சு. கதி. சுப்பையா செட்டியார்
40 ,, சு. சித. பழ. மெ. சிதம்பரம் செட்டியார்
41 ,, அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார்
42 ,, கு. செ. மு. பெரி. காசிவிஸ்வநாதன்செட்டியார்
43 ,, பெ. ப. வி. வீர. பழ. வீரப்ப செட்டியார்
44 ,, சு. வீர. மெ. வீரப்பசெட்டியார், (பகுமங்தான்)
45 ,, மு. ராம. சாத. சாத்தப்ப செட்டியார்
46 ,, மு. உ. வீரப்ப செட்டியார்
47 ,, கு. ராம. வீரப்ப செட்டியார்
48 ,, ப. வடு. வி. நா. வீரப்ப செட்டியார்
49 ,, அ. இராமசாமி செட்டியார் (தோங்குவா.)
50 ,, சுப. சித. லெட்சுமணன் செட்டியார்
51 ,, லெ. வீரப்ப செட்டியார் (பகுமங்தான்)

## கௌரவ அங்கத்தினர்கள்

திருவாளர் ஏ. பெரி. பெரியணன் செட்டியார்
" ப. வடு. பெரி. வீர. வீரப்ப செட்டியார்
" கு. வீர. பழ. அ. பழனியப்ப செட்டியார்
" ப. வடு. பெரி. ராம. காசிச்செட்டியார்
" பெரி. அரு. வீரப்ப செட்டியார்
" மு. ப. வீர. பழ. பழனியப்ப செட்டியார்
" அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார்
" ராம. வே. ராம. வெங்கிடாசலம் செட்டியார்
" ஏ. மு. முத்தப்ப செட்டியார்
" ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார்
" எஸ். பி. வீரப்பா அவர்கள்
" சுப. சித. சுப்பிரமணியன் செட்டியார்
" அ. கருப்பன் செட்டியார், (தனவணிகன் ஆசிரியர்) ரெங்கோன்
" ராய. சொக்கலிங்கன் அவர்கள், (ஊழியன் ஆசிரியர், சென்னை)
" சோ. முருகப்பா அவர்கள், (குமரன் ஆசிரியர், காரைக்குடி)
" A. S. சர்மா அவர்கள், (செட்டிநாடு ஆசிரியர், காரைக்குடி)
" ஆ. வி. லெ. அருணசலம் செட்டியார், காரைக்குடி.

---

## அபிமானிகள்.

திருவாளர் அ. ப. சி. மு. சின்னையா செட்டியார்
" பெரி. அரு. நாகப்ப செட்டியார்
" சுப. நாராயணன் செட்டியார்
" மு. வினைதீர்த்தான் செட்டியார்
" பழ. சு. பழ. பழநியப்ப செட்டியார்

„ பழ. மு. பழ. வீர. முருகப்ப செட்டியார்
„ மு. சோமசுந்தரம் செட்டியார்
„ அரு. உ. வீர. அழகப்ப செட்டியார்
„ வீர. சும. குமரப்ப செட்டியார்
„ அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார்
„ சி. வீர. சோம. வீரப்ப செட்டியார்.

## மாதக் கூட்டங்கள்.

யுவ ஆண்டு வைகாசித் திங்கள் முதல் பங்குனித்திங்கள் வரை பல அறிஞர்கள் தலைமையில் அன்பர்கள் பலர் உபந்நியாசங்கள் புரிய மாதக்கூட்டங்கள் பதினொன்று நடைபெற்றன.

## பதின்மூன்றாவதாண்டு விழா

யுவ ஆண்டு சித்திரைத்திங்கள் ௰௫-ம் நாள் காலை மாலை இருவேளைகளிலும் சங்கத்தின் பதிமூன்றாவது ஆண்டு விழாவும் வித்தியாசாலையின் மூன்றாவது ஆண்டு விழாவும், தமிழ்நாட்டுத் தலைவரும், நீதிமன்றத்து வழக்கறிஞரும், திருக்குறள் ஆராய்ச்சியாளரும் தேசபக்தருமாகிய தூத்துக்குடி உயர்திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தலைமையில் காரைக்குடி திரு சா. கணேசன் செட்டியாரவர்கள் சீர்திருத்தம் என்னும் பொருள்பற்றியும், அண்ணாமலை சர்வகலாசாலை மாணவர் திரு வீர. இராமநாதன் அவர்கள் மாணவர்களின் பிற்காலவாழ்க்கை என்னும் பொருள்பற்றியும், மானாமதுரை திரு சி. விஸ்வநாதன் BA., LT., அவர்கள் பாரதியாரின் உண்மையான நாட்டம் என்னும் பொருள் பற்றியும், சென்னை திரு. மறை திருநாவுக்கரசு அவர்கள் தலைவன் வணங்கும் தமிழ் என்னும் பொருள்பற்றியும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ, மாணவிகளால் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம் முதலியவைகளும் நடைபெற்றன.

## விசேடக் கூட்டங்கள்.

யுவ ஆண்டு சித்திரைத்திங்கள் ௰௮-ம் நாள் மாலை 5மணிக்கு தூத்துக்குடி தேசபக்தர் உயர்திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் விதியும் வினையும் என்னும் பொருள்பற்றியும், சென்னை பல்லாவரம் திருவாளர் மறை. திருநாவுக்கரசு அவர்கள் காரைக் காலம்மையார் என்னும் பொருள் பற்றியும் உபந்நியாசம் புரிந்தார்கள்.

யுவ ஆண்டு வைகாசித்திங்கள் ௰௪-ம் நாள் மாலை 5மணிக்கு திருச்சி நேஷனல் காலேஜ் பிரின்ஸ்பால் உயர் திரு வே. சாரநாதன் அவர்கள் தலைமையில் சரஸ்வதி வித்தியாசாலை மாணவ, மாணவிகளும், திருச்சி திரு. ராம. சுப்பிரமணியம் அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள்.

---

## ஜீவகாருண்யப் பிரசாரம்

சங்கத்தின் சார்பில் சாக்கை ஸ்ரீ உய்யவந்தம்மன் உற்சவத்தில் நடைபெறும் பலிப்பொங்கலை நிறுத்துவான்வேண்டி யுவ ஆண்டு வைகாசித்திங்கள் ௨௰௪-ம் நாள் மாலையில் சங்கத்தின் அங்கத்தினர்களாலும், வித்தியாசாலை மாணவர்களாலும் பெரு சநுக்கத்தில் பிரசங்கங்கள் நடாத்தப்பெற்று துண்டு பிரசுரங்களும் வழங்கப்பெற்றன.

---

## காந்தி ஜெயந்தி விழா.

யுவ ஆண்டு புரட்டாசித்திங்கள் ௬-ம் நாள் மாலையில் காந்திஜீயின் திருவுருவப்படத்தை காரில்வைத்து அலங்கரித்து முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் வந்து மதுராமித்திரன் ஆசிரியர் திரு என். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பல அன்பர்களும்

வித்தியாசாலை மாணவ, மாணவிகளும் காந்தியடிகளின் சரிதம், கைத்தொழில், கிராமப்புனருத்தாரணம் ஆகியவைகளைக் குறித்து சொற்பொழிவாற்றினார்கள். பின்பு காந்தியடிகளைப் பாராட்டி அவர்கள் நீடுழிகாலம் திடகாத்திரத்தோடு வாழவேண்டுமென்றும், அதற்குக் கடவுள் அனுக்கிரகம் புரியுமாறும் பிரார்த்தனைத் தீர்மானம் ஒன்று சபையோர்களின் கரகோஷத்தினிடையே நிறைவேற்றப்பெற்று ௸ செய்தியை காந்தியடிகளுக்கு வார்தாவுக்கு யகவ அன்று தந்திமூலமாக அனுப்பப்பெற்றது. (௸ விழா திரு சா. சிதம்பரம் செட்டியார், திரு. பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார், திரு. சித. இராமசாமி செட்டியார், இவர்களின் பொருளுதவியால் நடைபெற்றது.)

---

## கலைமகள் விழா.

யுவ ஆண்டு புரட்டாசித்திங்கள் 20-ம் நாள் ஸ்ரீ சரஸ்வதி தேவியின் திருவுருவப் படத்தை இரதத்தில் அலங்கரித்து மேள வாத்திய கோஷத்துடனும், வித்தியாசாலை மாணவ, மாணவிகள், பஜனையுடனும் முக்கியதெருக்களின் வழியாக ஊர்வலம் வந்தபின் வித்தியாசாலை மாணவிகளால் இசையோடு பந்தாட்டம், கும்மி, கோலாட்டம் நடைபெற்றதும், சங்கத்தில் பூஜை நடாத்தி வந்திருந்தோர் அனைவருக்கும் வினியோகங்கள் வழங்க, விழா நன்கு நிறைவெய்தியது. (மேற்படி விழா திரு. வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் திரு. வடு. மு. ராம. பழ. இராமநாதன் செட்டியார், திரு. ள. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்ப செட்டியார், ஆகியவர்களின் பொருளுதவியால் நடைபெற்றது.)

## காங்கிரஸ் பொன் விழா.

யுவ ஆண்டு மார்கழித்திங்கள் 13-ம் நாள் மாலையில் காங்கிரஸ் பொன்விழா கொண்டாடப் பெற்றது. அவ்வமயம், திரு. எ. பெரி. வீர. வீரப்ப செட்டியாரவர்கள் தலைமையில், சென்னை, ஊழியன் ஆசிரியர் திரு. ராய. சொக்கலிங்கன் அவர்களும், வித்தியாசாலை மாணவ, மாணவிகளும் காங்கிரஸின் தொண்டைக் குறித்துப் பாராட்டிப் பேசியதும், காங்கிரஸ் தலைவர் திரு. பாபு ராஜேந்திரபிரசாத் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையை வாசித்தபின்னர் காங்கிரஸ் மகா சபை தேசத்தொண்டு ஆற்ற நீடூழி காலம் வாழ வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதாகத் தீர்மானம் ஒன்று சபையோர்களின் கரகோஷத்தினிடையில் நிறைவேற்றப்பெற்றது.

---

## அனுதாபக் கூட்டங்கள்.

நமது மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் மரணமடைந்தது குறித்தும், திருமதி கமலாநேரு அவர்கள் மரணமடைந்தது குறித்தும், திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் மரணமடைந்தது குறித்தும் அனுதாபக் கூட்டங்கள் கூட்டப்பெற்று, அதுகாலை அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

---

## வாசகசாலை.

இச் சங்கத்தின் சார்பில் வாசகசாலை ஒன்று நடைபெற்று வருகிறது. அதில் 308 புத்தகங்கள் இருக்கின்றன. தினப் பதிப்பு, வாரப்பதிப்பு, மாதப்பதிப்பு, ஆகிய பத்திரிகைகள் (14) வரவழைக்கப்படுகின்றன. பல அன்பர்கள் வாசித்து வருகிறார்கள்.

## நன்கொடை.

திரு. ட்ழ. மு. பழ. வீர. முரு. மகள் வள்ளியம்மை, காப்புக் கட்டுப் புதுமையில் ரூ 5-ம், திரு. எ. பேரி. வீர. சோ. மகள் மீனாக்ஷி காப்புக்கட்டுப் புதுமையில் ரூ 7-ம், திரு. ப. சே. பழ. சே. பழ. மகன் சேதுராமன் காப்புக்கட்டுப் புதுமையில் ரூ 5-ம், திரு. மு. மு. அழ. மகன் முத்துக்கருப்பன் காப்புக் கட்டுப் புதுமையில் ரூ 10-ம், திரு. ந.அழ.வே.ராம. மகள் மீனாக்ஷி திருமணத்தில் ரூ 5-ம், திரு. மு. மு. ராம. மகள் தெய்வானை காப்புக் கட்டுப் புதுமையில் ரூ 3-ம், மேற்படியார்கள் மகன் முத்தையா காப்புக்கட்டுப் புதுமையில் ரூ 3-ம், திரு. ப. வடு. பேரி. ராம. கா. மகன் அருணாசலம் செட்டியார் திருமணத்தில் ரூ 5-ம், திரு. பேரி. வீர. ராம. பேரி. மகள் சோலச்சி திருமணத்தில் ரூ 11-ம் பாசியன் பாரதி சங்கத்தார் ரூ 5-ம் நன்கோடையாக உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## பத்திரிகைக்கு நன்கொடை உதவியவர்கள்.

சுதேசமித்திரன்

தினப்பதிப்பு, திரு. பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார்.

தினமணி ” 
- திரு. வீர. பழ. விநைதீர்த்தான் செட்டியார்.
- திரு அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார்.
- திரு. ப. வடு. பெரி. வீர. வீரப்ப செட்டியார்.
- திரு. சித. இராமசாமி செட்டியார்.

| | |
|---|---|
| சுதந்திரச்சங்கு தினப்பதிப்பு, தமிழரசு, விநோதன் { மாதப் பதிப்பு | திரு. லெ. இராமநாதன் செட்டியார். |
| விடுதலை வாரம் இருமுறை பதிப்பு. | திரு. ப. செ. பழ. சே. பழனியப்ப செட்டியார். திரு. அ. அழ. அண்ணாமலை செட்டியார். |
| ஆனந்தவிகடன் வாரப்பதிப்பு. | திரு. சித. ராம. குமரப்ப செட்டியார் |
| சுதேசமித்திரன் ,, | திரு. அ. நாகப்ப செட்டியார். ,, அ. மு. சித. முத்தையா செட்டியார். |
| ஊழியன் ,, | திரு. வீர. பழனியப்ப செட்டியார். |
| குடி அரசு ,, பகுத்தறிவு மாதப்பதிப்பு | திரு. சுப. நாராயணன் செட்டியார். |
| சுதந்திரன் வாரப்பதிப்பு | திரு. ப. செ. பழ. வினைதீர்த்தான் செட்டியார். |

ஆகியோர்களால் நன்கொடையாக உதவப்பெற்று வருகின்றன. செட்டிநாடு, வாரம் இருமுறைப் பத்திரிகையை ஸ்டாம்புக்கட்டணம் மட்டும் பெற்றுக்கொண்டு அப்பத்திரிகை ஆசிரியர் அனுப்பி வருகின்றனர்.

---

## புத்தகங்கள் சாமான்கள் நன்கொடை தந்தவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| தூத்துக்குடி | வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் புஸ்தகங்கள் | ... | 12. |
| சென்னை | தென்னிந்திய ஜீவரெட்சக பிரசார சபையார் புஸ்தகங்கள் | ... | 6. |

| | | |
|---|---|---|
| ப. செ. பழ. சே. பழனியப்பசெட்டியார் | புஸ்தகங்கள் | 3. |
| | இரும்பு நாற்காலி | 1 |
| | டிரங்குப்பெட்டி | 1. |
| சுப. நாராயணன் செட்டியார் ... <br> கநி. சுப்பையா செட்டியார் ... | இரும்பு நாற்காலி இரண்டு | |
| வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் | புஸ்தகம் ... | 1. |
| | இரும்பு நாற்காலி | 1. |
| ராம, சுப. அடைக்கப்ப செட்டியார் | ... இரும்பு நாற்காலி | 1. |
| லெ. இராமநாதன் செட்டியார் | புஸ்தகம் ... | 1. |
| | இரும்பு நாற்காலி | 1. |
| மெ. சிதம்பரம் செட்டியார் ... | இரும்பு நாற்காலி | 1. |
| கு. ராம. வீரப்ப செட்டியார் ... | இரும்பு நாற்காலி | 1. |
| சித. ராம. குமரப்ப செட்டியார் ... | இரும்பு நாற்காலி | 1. |
| சா. சிதம்பரம் செட்டியார் ... | சங்கப் பெயருள்ள ரப்பர் ஸ்டாம்பு | 2. |
| காந்தி தாஸன் (பர்மா) ... | புஸ்தகம் ... | 1. |

வீர. பழனியப்ப செட்டியார்

| | | |
|---|---|---|
| ,, | சங்கப்பெயருள்ள போர்டு ... | 1. |
| ,, | வாசகசாலைப்பெயருள்ள போர்டு | 1. |
| ,, | போட்டோ படம் ... | 1. |

| | | |
|---|---|---|
| அ.அழ. அண்ணாமலை செட்டியார் ... | புஸ்தகம் ... | 1. |
| அரிமளம், செ. அ. ராம. சின்னமாச்சி | வங்காளம் அண்டா | 1. |
| மு. ப. வீர. பழ. மீனாக்ஷி ஆச்சி | கும்பகோணம் கரண்டி | 1. |
| கு. வீர. பெரி. வீர. தெய்வானை ஆச்சி | பித்தளை அடுக்கு | 1 |
| | மங்கு வாளி | 1. |
| எ. பெரி. வீர. பெரி. விசாலாட்சி ஆச்சி | தாம்பாளம் ... | 1. |
| ப. பெ. அரு. ராம. அரு. லெட்சுமி ஆச்சி ... | டிப்பன் பாக்ஸ் ... | 1. |
| கு. லெ. நாகம்மை ஆச்சி ... | பித்தளை தவலை ... | 1. |

சிவமயம்

# புதுவயல்
# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின்
# நான்காவது ஆண்டு
# அறிக்கை.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இச் சங்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்ருகிய கல்வியை வளர்க்கும் பொருட்டு ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயருடன் ஆங்கீரஸ ஆண்டு தைத்திங்கள் 4-ம் நாள் (16—1—33)-ல் அமைக்கப் பெற்று தற்பொழுது நான்கு ஆண்டுகள் நிறைவெய்தி ஐந்தாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

---

## கல்வி முறை.

சிறுவர் சிறுமியர்களுக்கு தமிழ்க்கல்வி, ஆங்கிலம், கணக்கு சரித்திரம், பூகோளம், சயன்ஸ், சுகாதாரம், இராஜாங்கமுறை நூல், இலக்கணம், இலக்கியம், தேவாரம், சித்திரம், ஆகிய பாடங்களும், கைத்தொழில், தேகாப்பியாசம், பாட்டு, பேச்சு, நடிப்பு முதலியவைகளும், சிறுமியர்களுக்கு கும்மி, கோலாட்டமும் நடத்திவரப் பெறுகின்றன.

## காரியதரிசி நிர்வாகஸ்தர்.

இவ் வித்தியாசாலைக்கு திரு. பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியாரவர்களை காரியதரிசியாகவும், திரு. செ. சு. கதி. சுப்பையா செட்டியாரவர்களை நிர்வாகஸ்தராகவும் நியமிக்கப் பெற்று நடைபெற்று வருகிறது.

## ஆசிரியர், மாணவர்.

| ஆண்டு. | ஆசிரியர். | ஆசிரியை | வகுப்புகள் | மாணவர்கள் | மாணவிகள். |
|---|---|---|---|---|---|
| முதலாவது | 2 | 1 | 4 | 28 | 34 |
| இரண்டாவது | 3 | 2 | 4 | 40 | 38 |
| மூன்றாவது | 5 | 1 | 5 | 40 | 39 |
| நான்காவது | 6 | 1 | 6 | 59 | 52 |

குறிப்பு.—இவ் வித்தியாசாலையில் தனவைசியர் அல்லாத மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பெற்று வருகிறது.

## புத்தகசாலை,

மாணவர் நூல் நிலயத்தில் கல்வி சம்பந்தமாக 190-புத்தகங்கள் உள்ளன.

## புக்ஸ்டால்.

மாணவ, மாணவிகளுக்கு வேண்டிய பாடப் புத்தகங்கள் ஸ்டேஷனரி சாமான்கள் முதலியன வித்தியாசாலையின் சார்பில் விற்பனை செய்யப் பெறுகின்றன.

---

## விழாக்கள்.

வருடப்பிறப்பு விழா, திருவள்ளுவர் விழா, விநாயகசதுர்த்தி விழா, கலைமகள் விழா, விஜய தசமி விழா, தைப்பொங்கல் விழா, ஆகிய விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

குறிப்பு.—விநாயகர் சதுர்த்தி விழா, திரு. வீர. சோலையப்ப செட்டியார், திரு அ. இராமசாமி செட்டியார், திரு. லெ. இராம நாதன் செட்டியார். விஜயதசமி விழா, திரு. அ. மு. சித. முத்தையா செட்டியார், திரு. வீர. பழனியப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியால் நடைபெற்றன.

---

## பரிக்ஷை.

இவ் வாண்டில் 16—3—36௳ முதல் ஒரு வாரம் வரை வருடப் பரிக்ஷை பள்ளத்தூர் A. C. ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் உயர்திரு A. M. S. இராகவைய்யங்கார் B.A.,L.T., அவர்களாலும், ஷை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் K. மாணிக்கம் பிள்ளை அவர்களாலும் நடாத்தப்பெற்று தேர்ச்சிக்குறிப்புகள் (Progress Report) வழங்கப்பெறுகின்றன.

## மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள்

வித்தியாசாலை மூன்றாவதாண்டு நிறைவு விழாவில் மாணவ மாணவிகளுக்கு வகுப்புத் தேர்ச்சிப் பரிசுகள், நீண்டநாள் வந்தவர்களுக்குப் பரிசுகள், சுத்தமாக வந்தவர்களுக்குப் பரிசுகள், பெண்களுக்குக் கைத்தொழில் பரிசுகள் ஆகியவைகள் திரு. எ. பெரி.வீர. வீரப்ப செட்டியாரவர்களின் பொருளுதவியால் அளிக்கப்பெற்றன

---

## போஷகர்கள்.

| | | | |
|---|---|---|---|
| திருவாளர் | பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் | ரூ. | 240 |
| ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் | ,, | 120 |
| ,, | பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் | ,, | 120 |
| ,, | அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார் | ,, | 120 |
| ,, | எ. அ. ப. வீர பழனியப்ப செட்டியார் | ,, | 60 |
| ,, | வீர. பழனியப்ப செட்டியார் ... | ,, | 25 |
| ,, | சுப. நாராயணன் செட்டியார் ... | ,, | 25 |
| ,, | வீர சோலையப்ப செட்டியார் ... | ,, | 25 |
| ,, | ப. வடு. வி. கா. வீரப்ப செட்டியார் | ,, | 25 |
| ,, | ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார் | ,, | 25 |
| ,, | ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார் | ,, | 25 |

மேல் குறிப்பிட்டவர்கள் யுவ ஆண்டில் நன்கொடையாக ரூ. 810 உதவியுள்ளார்கள்.

---

## வெள்ளிக் கிண்ணம்.

கண்டனூரில் (28—12—35)ல் நடைபெற்ற காங்கிரஸ் பொன் விழா கொண்டாட்டத்திற்கு திரு. சி. ராம. சொ. சு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் அழைப்பிற்கிணங்கி நமது வித்

தியாசாலை மாணவ, மாணவிகள் சென்று பாட்டு, பேச்சு, கும்மி, கோலாட்டம் நடாத்தியதைப் பாராட்டி கண்டனூர் தனவைசிய இளைஞர்களின் சார்பாக ஷெ. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் வெள்ளிக்கிண்ணம் ஒன்று பரிசாகத் தந்துள்ளார்கள்.

---

## புத்தகங்கள் சாமான்கள் நன்கொடை தந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| சென்னை தென்னிந்திய ஜீவரட்சக பிரசார சபையார் | புத்தகங்கள் | 6 |
| மதுரை புத்தக வியாபாரி E. M. கோபால கிருஷ்ணக் கோன் | புத்தகங்கள் | 8 |
| லெ. சிதம்பரம் ... ... | புத்தகம் | 1 |
| கு. வீர. பழ. அ. தெய்வானை ஆச்சி ... | பித்தளை தவலை | 1 |
| ராம. கப. ... ... ... | டிரங்குப்பெட்டி | 1 |
| கோட்டையூர் வெ. சி. அ. ராம. அழ. இராமசாமி செட்டியார் | படம் | 1 |
| | புத்தகங்கள் | 5 |
| பெ. ப. வி. அரு. ராமசாமி செட்டியார் | இரும்புச்சேர் | 2 |
| கப. நாராயணன் செட்டியார் ... | இரும்புச்சேர் | 1 |
| அ. ராமசாமி செட்டியார் ... | பிரம்பு பின்னல் வளையம் | 6 |
| வீர. பழனியப்ப செட்டியார் ... | புத்தர் சிலை | 1 |
| ,, சென்னை ராஜதானி | படம் | 1 |
| ,, டேபிள் பெல் | ... | 2 |
| ,, டென்னிஸ் பந்து டஜன் | | 1 |
| ,, வித்தியாசாலை பெயருள்ள போர்டு | | 1 |
| ஒரு கிழமைக்கு ஒரு நீதி கண்ணாடி பெட்டியுடன் செட்டு | | 1 |
| P. S. V. விலாசமுள்ள வெள்ளிப் பாச் | ... | 2 |

| | | | |
|---|---|---|---|
| போதனமுறைக் கெடியாரப் படம் | | ... | 1 |
| புஸ்தகங்கள் | ... ... | ... | 17 |
| படங்கள் | ... ... | ... | 6 |
| வீர. சோலையப்ப செட்டியார் | ... | மின்னல் வளையம் | 6. |
| | | காந்திசிலை சிறிது | 1. |
| | | புஸ்தகம் | 1. |
| சா. சிதம்பரம் செட்டியார் வித்தியாசாலை பெயருள்ள | | | |
| | | ரப்பர் ஸ்டாம்பு | 1. |
| | | புஸ்தகம் | 1. |
| கண்டனூர் பி. ச. லெ. | ... | பாரதமாதா சிலை | 1. |
| மு. வினைதீர்த்தான் செட்டியார் | ... | இரும்புக் கம்பு | 1. |
| சென்னை லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார் | | புத்தகங்கள் | 8. |
| பெ. க. வீர. நாருயணஞ் செட்டியார் | | நாற்காலி | 2. |
| சொக்கனுசாரி | ... ... | ரூல்க் கம்பு | 2. |
| வ. உ. சிதம்பரம பிள்ளை | ... | புத்தகங்கள் | 2. |
| ஆ. முத்துசிவம் | ... ... | குறிச்சி | 1. |
| பள்ளத்தூர். நெ. பெ. ராம. உமையாள் ஆச்சி | ... | நாற்காலி | 1. |
| செ. க. கதி. சுப்பையா செட்டியார் | | கத்தரிக் கோல் | 1. |
| ப. வடு. வி. நா. வீரப்ப செட்டியார் | | ரூல்க்கம்பு | 2. |
| ஜி. ஞானரெத்தினக்கண்ணம்மாள் | | புத்தகங்கள் | 4. |

---

## நான்காவதாண்டு விழாவில் பரிசு பெறுபவர்கள்.

### வகுப்புப் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | வெ. இராமசாமி |
| ,, | 2-வது பரிசு | ராம. வீரப்பன் |

| | | |
|---|---|---|
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | சப. நடராஜன் |
| ,, | 2-வது பரிசு | இ. சுப்பிரமணியன் |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | நா. நாகம்மாள் |
| ,, | 2-வது பரிசு | பழ. பெரியணன் |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. வள்ளியம்மை |
| ,, | 2-வது பரிசு | பொ. ஷண்முகம் |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | மரு. பெருமாள். |
| ,, | 2-வது பரிசு | ந. காமாட்சி |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | பழ. உமையாள் |
| ,, | 2-வது பரிசு | ச. பழனிவேல். |

---

## நீண்ட நாள் வந்தவர்கள்

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | ராம. வீரப்பன்<br>கும. ரெங்கநாதன் |
| ,, | 2-வது பரிசு | அரு. மீனாட்சி |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | பா. சுப்பய்யா |
| ,, | 2-வது பரிசு | பழ. அண்ணாமலை |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | பா. சிதம்பரம் |
| ,, | 2-வது பரிசு | வீர. வீரப்பன்<br>பழ. பெரியணன் |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | சுப. வடிவேலு |
| ,, | 2-வது பரிசு | வீர. கோவிந்தன் |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | பெரி. இராமசாமி |
| ,, | 2-வது பரிசு | வீர. உமையாள் |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | பழ. உமையாள் |
| ,, | 2-வது பரிசு | வீர. பழனியப்பன் |

## சுத்தமாக வந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | ராம. வீரப்பன் |
| ,, | 2-வது பரிசு | கும. ரெங்கநாதன் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | பா. சுப்பய்யா |
| ,, | 2-வது பரிசு | பழ. அண்ணாமலை |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | பா. சிதம்பரம் |
| ,, | 2-வது பரிசு | பழ. பெரியணன் |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | சோம. தெய்வானை |
| ,, | 2-வது பரிசு | சுப. வடிவேலு |
| 2-வது வகும்பு | முதற் பரிசு | பெரி. இராமசாமி |
| ,, | 2-வது பரிசு | ராம. அருணாசலம் |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. பழனியப்பன் |
| ,, | 2-வது பரிசு | பழ. உமையாள் |

---

## பெண்கள் கைத்தொழில் பரிசு.

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | அரு. மீனாட்சி |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | ராம. வள்ளியம்மை |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | கா. நாகம்மாள் |
| ,, | 2-வது பரிசு | வீர. ரெங்கநாயகி |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | வெ. கிருஷ்ணவேணி |
| ,, | 2-வது பரிசு | து. லெட்சுமி |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | திரு. செல்லம் |
| ,, | 2-வது பரிசு | ராம. ராஜாம்பாள் |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | பெரு. சரஸ்வதி |
| ,, | 2-வது பரிசு | பழ. உமையாள் |

யுவ-ஞு பங்குனி-மீ 31வ வரை

## ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் கணக்கு

| விபரம். | | வரவு ரூ | அ | பை | பற்று ரூ | அ | பை |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீ விநாயகர் வரவு | ... | 1 | 12 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு | ... | 1 | 12 | 0 | | | |
| ஆதாய வரவு | ... | 23 | 3 | 6 | | | |
| நன்கொடை வரவு | ... | 223 | 0 | 0 | | | |
| சந்தாக் கணக்கு வரவு | ... | 641 | 5 | 0 | | | |
| ஆண்டுவிழா நன்கொடை வரவு | ... | 1311 | 11 | 0 | | | |
| கைமாத்து வரவு | ... | 10 | 0 | 0 | | | |
| சாமான் கோள்முதல் பற்று | ... | | | | 185 | 10 | 9 |
| புஸ்தகம் கோள்முதல் பற்று | ... | | | | 8 | 12 | 0 |
| மாதக்கூட்டச் சிலவு | ... | | | | 94 | 4 | 0 |
| விசேடக்கூட்டச் சிலவு | ... | | | | 75 | 15 | 6 |
| சில்லரைச் சிலவு | ... | | | | 147 | 0 | 9 |
| ஆண்டு விழாக் கணக்கு பற்று | ... | | | | 1497 | 1 | 0 |
| வாசகசாலை பற்று | ... | | | | 94 | 15 | 6 |
| சேவிங் பாங்க் பற்று (வீர.பழ.வி. பேரால்) | ... | | | | 100 | 0 | 0 |
| இருப்பு | ... | | | | 9 | 0 | 0 |
| ஆ. ரூ. | | 2212 | 11 | 6 | 2212 | 11 | 6 |

யுவ-ஷூ பங்குனி-மீ 31௳ வரை

## ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் கணக்கு.

| விபரம். | வரவு ரூ | அ | பை | பற்று ரூ | அ | பை |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீ விநாயகர் வரவு ... | 1 | 4 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு ... | 0 | 8 | 0 | | | |
| ஆதாய வரவு ... | 85 | 0 | 3 | | | |
| நன்கொடை வரவு ... | 2335 | 0 | 0 | | | |
| ச.வி. ஆசிரியர்கள் நிதி வரவு ... | 25 | 0 | 0 | | | |
| பிள்ளைகள் சம்பள வரவு ... | 1369 | 7 | 0 | | | |
| கைத்தொழில் சாமான் வித்து வரவு ... | 3 | 13 | 0 | | | |
| ச. வி. மாணவ டிராமாடிக் சோசைட்டி வரவு ... | 538 | 3 | 0 | | | |
| இரண்டாவதாண்டில் நடத்திய "வசீகர சுந்தரி" டிராமா பற்று ... | | | | 390 | 0 | 0 |
| சாமான் கொள்முதல் பற்று ... | | | | 179 | 15 | 9 |
| சம்பளச் சிலவு ... | | | | 2694 | 11 | 6 |
| ஸ்டேஷனரிச் சிலவு ... | | | | 80 | 14 | 9 |
| சில்லரைச் சிலவு ... | | | | 520 | 6 | 0 |
| புக்ஸ்டால் பற்று ... | | | | 45 | 0 | 0 |
| பேரி. வீர. ராம. பற்று ... | | | | 300 | 0 | 0 |
| சேவிங் பாங்க் பற்று (சா.சித. பேறுல்) ... | | | | 85 | 0 | 0 |
| லே. ஸ்ரீநிவாஸய்யர் பற்று ... | | | | 32 | 8 | 0 |
| கைமாத்து பற்று .. | | | | 1 | 0 | 0 |
| இருப்பு ... | | | | 28 | 11 | 3 |
| ஆ. நூ. | 4358 | 3 | 3 | 4358 | 3 | 3 |

## வேண்டுகோள்.

உலகத்தில் மக்கள் சரியான முறைப்படி வாழ்வதற்கு கல்வி அவசியமாகும். நாகரீகமடைந்த எந்த தேசத்திலும் கற்றவர்தொகை அதிகமாகவேயிருக்கும். மேல் நாடுகளில் நூற்றுக்கு நூறு வீதம் கற்றவர்களாகி வருகிறுர்கள். நமதுநாட்டிலோ கல்லாதவர் தொகையினரே மிகுந்திருக்கின்றனர். இது மிகவும் குறைபாடுடையதாகும் நம் நாடு கல்வி விஷயத்தில் எவ்வளவுதூரம் பிற்போக்கடைந்திருக்கின்றதென்பதை உணர்ந்து சிறிதும் காலம் தாழ்த்தாது கவிபாரதியார் பரிந்து வேண்டியபடிக்கு வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளிகளை நிறுவி முன்னேற்றத்திற்கு உகந்த வழியில் கல்வியைப் பரவச் செய்தல் அன்பர்களின் முக்கிய கடமையாகும்.

மேற்கண்ட காரணங்களாலேயே அக்குறைபாட்டை நீக்குவான்வேண்டி நமது சங்கத்தின் சார்பில் இவ் வித்தியாசாலையை ஸ்தாபித்து நான்கு ஆண்டுகளாக மிகுந்த கவனத்துடனேயே சிரமம் கவனியாது போற்றி வளர்க்கப்பட்டு வருகிறதெனினும் இதுவரையில் கல்வி போதித்தவகையில் ஒரு அளவு பயன் கிடைத்திருக்கிறதென்றாலும் மகிழ்ச்சிப்படும்படியான அளவு பயன் கிட்டிவிட்டதென்று சொல்வதற்கில்லை. இனிவரப்போகும் ஆண்டில் பெற்றோர்கள் கவனம் செலுத்தி குழந்தைகளைத் தவறாது பள்ளிக்கனுப்பி வித்தியாசாலையை அபிவிர்த்தியடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் கல்வியில் அன்புடையார் ஒவ்வொருவரும் :போஷகர்களாகச் சேர்ந்து வித்தியாசாலையை சிறந்த முறையில் நடாத்துவதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்து இளம் மனம் படைத்த ஒவ்வொருவரும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து பொதுநலத்தொண்டில் ஈடுபட்டு சங்கத்தையும் வித்தியாசாலையையும் ஆதரித்துவர வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## நன்றியறிவித்தல்.

நமது சங்கமும் வித்தியாசாலையும் வளர்ந்தோங்கி வரவேண்டுமென்ற பேராவாவினால் தங்களுடைய வேலைகளை எல்லாம் பொருட்படுத்தாது அடிக்கடி ஈண்டு வந்து கலந்துழைக்கும் அங்கத்தினர்களுக்கும், அபிமானிகளுக்கும் பெரியோர்களுக்கும் வித்தியாசாலையின் வளர்ச்சி கருதி பொருளுதவி செய்துவரும் போஷகர்களுக்கும், புத்தகங்கள் பத்திரிகைகள் சாமான்கள் நன்கொடைகள் முதலிய உதவிய அன்பர்களுக்கும், தாய்மார்களுக்கும், ஆண்டு விழா, மாதக் கூட்டம் இவைகளில் தலைமை தாங்கி விரிவுரை நிகழ்த்திய அறிஞர்களுக்கும், சங்கம், வித்தியாசாலை இவைகளைப் பார்வையிட்டு நல்லுரை வழங்கிய பெரியார்களுக்கும், பரீக்ஷை நடாத்திய அறிஞர்களுக்கும், பொறுப்புடனும் ஊக்கத்துடனும் போதித்துவரும் ஆசிரியர்களுக்கும் ஊக்கம் குன்றாது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பிவரும் பெற்றோர்களுக்கும், நமது நிகழ்ச்சிகளைத் தாமதியாது பிரசுரித்துவந்த பத்திரிகாசிரியர்களுக்கும், இச் சங்கத்திற்குக் கட்டிடம் தந்துதவும் திரு. எ.பெரி. குடும்பத்தார் அவர்களுக்கும், வித்தியாசாலைக்குக் கட்டிடம் தந்துதவும் திரு. பெரி. வீர. ராம. குடும்பத்தார் அவர்களுக்கும், வாசகசாலைக்குக் கட்டிடம் தந்துதவும் திரு. சித. ராம. அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நிதிமிகுத்தவர் பொற்குவை தாரீர்
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் லருளீர்
ஆண்மையாள ருழைப்பினை நல்கீர்
மதுரத்தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணிபூசைக் குரியன பேசீர்
எதுவும்நல்கி இங்கெவ் வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்

தங்கள் அன்புள்ள,

சா. சிதம்பரம்.

காரியதரிசி.

## அபிப்பிராயம் தந்தவர்கள்.

(மொழி பெயர்ப்பு)

28—4—35

எனக்கு புதுவயலிலுள்ள ஸ்ரீசரஸ்வதி சங்கத்தின் 13-வது ஆண்டு விழாவிலும், மேற்படி ஊரிலுள்ள ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் மூன்றாவது ஆண்டு விழாவிலும் கலந்துகொள்ளும் இன்பம் கிடைத்துளது. மாணவ, மாணவிகள் காட்டிய திறத்தினின்றும் இந்த ஜில்லாவில் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வரும் கலாசாலைகளில் இது ஒன்றென்று நான் சொல்லுவேன். கல்வி போதிப்பதிலும், சங்கீதம், நடிப்பு முதலிய திறன்களை உயர்ந்த முறையில் விருத்தி செய்வதிலும் ஆசிரியர்கள் மிகுந்த உழைப்பு எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை அவர்கள்பால் பெருமையாகச் சொல்லலாம். திறமையான முறையில் இந்த வித்தியாசாலை நடத்தப்பட்டு வருவதை முன்னிட்டு நான் இந்த வித்தியாசாலை நிர்வாகக் குழுவினரை களிப்புடன் பாராட்டுகின்றேன். தற்போது செய்துவரும் மிகுந்த உபயோகமான தொண்டை இன்னும் பல்லாண்டுகளுக்கு புதுவயலிலுள்ள குழந்தைகளுக்கும் இன்னும் அதன் பக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஆற்றிவர இந்த வித்தியாசாலைக்கு நீண்ட ஆயுளைத் தந்து ஆசிர்வதிக்கும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

(Sd.) C. விஸ்வநாதன் பி.ஏ.,எல்.டி.,
முதலாவது உதவி ஆசிரியர்,
O. V. C. உயர்தரக் கலாசாலை,
மானமதுரை.

1935-ம்ஹு எப்பிரல் மாதம் 28-ம் தேதி நடைபெற்ற புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா அவையின்கண் தலைமை வகிக்கும் பாக்கியம் பெற்றேன். வித்தியாசாலையின் மாணவர் மாணவிகள் அவையின்கண் நடாத்திய சம்பாஷணைகளும் நடிப்புக்களும் பாடிய பாடல்களும் எனது தெய்வ பக்தியையும் தேசாபிமானத்தையும் மொழிப்பற்றையும் ஒரேகாலில் மிக வளர்த்துவிட்டன. மாணவிகள் நடாத்திக்காட்டிய பெண்கள் சீர்திருத்த மகாநாட்டின் நடவடிக்கைகள் என் மனத்தையும், அவையினர் மனங்களையும் பூரணமாகக் கவர்ந்தன, சுருங்கக்கூறின் அம்மாணவர் மாணவிகளின் சொற்களால் பாடல்களால் நடிப்பு முதலியவற்றால் யானும் அவையினரும் அறனறிந்தேம். ஆன்ற பொருளறிந்தேம். இன்பின் திறனறிந்தேம். வீடு தெளிந்தேம், "மறனெறிந்த வாளார் அறிஞர்காள் மாணவர்கள் தம் வாயால், கேளாதெனவெல்லாம் கேட்டு" என்று கூறுதல் மிகையாகாது. இம்மாணவர் மாணவிகளுக்கும், அவர்களைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கும் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக்கும், அதன் போஷகர்களுக்கும், அதற்காதரமான ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தினருக்கும் அதன் அங்கத்தினர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்கள் முதலியவர்களுக்கும் எல்லா நன்மைகளையும் எல்லாம் வல்ல இறைவன் அளிப்பானாக.

(Sd.) வ. உ. சிதம்பரம் பிள்ளை
29—4—35.

---

ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் பதிமூன்றாம் ஆண்டு விழாவில் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களின் உரையாடல், விரிவுரை, நகைச்சுவைப் பேச்சு, இசைநலம் நடிப்பு, மகாநாடு முதலியவற்றைக்கண்டு கரையற்ற களிப்பெனுங் கடலில் ஆழ்ந்தேன். ஒவ்வொரு மாணவர் திறமையும் அவர் தம் ஆற்றலுக்கு விஞ்சிய

தாகவே இருந்ததென்பதற்கு ஐயமில்லை, மாணவர்களின் மேற்குறித்த செயல்களால் நாட்டுப் பற்று, சமயப்பற்று, மொழிப் பற்று, முதலிய சிரிய ஒழுக்கங்களெல்லாம், எத்திறத்தவர்க்கும் மனநிற்பநிந்து செயன்முறையில் அவைகளைக்கொண்டு வருவதற்கோர் ஊக்கம் உண்டாகின்றதென்பது ஒருதலை. நம்மிந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பயிற்சிகளை அளிக்கும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, தஞ்சைக் கரந்தை தமிழ்ச் சங்கம் போல, இப்பாடசாலையும் ஒன்றென்று சிறப்பித்துப் போற்றப்படுதற்குச் சிறிதும் ஐயமில்லை. இச்சங்கத்தையும் இவ்வித்தியாசாலையையும் போல ஒவ்வொரு செட்டியார் நகரங்களிலும் அமைப்புகள் அமைக்கப்பட்டால் செட்டிநாடு மிகமிக விரைவில் எல்லா நலங்களும் பொருந்திய இந்தியாவின் சிரிடமாய்க் கொண்டாடப்படும். இவ்வித்தியாசாலை மாணவர்தம் திறமைகள் அத்தனைக்கும் அதன் தலைமையாசிரியரும் ஏனைய ஆசிரியர்களுமே காரணமாவர். அவர்கட்கும இவ்விரண்டமைபபுகளையும் வைத்து திறம்பட நடத்தும் செட்டியார் பெருமக்கட்கும் என் அன்பையும் வணக்கத்தையும் உரிமைப்படுத்துகின்றேன்.

இங்ஙனம்,

புதுவயல்
29—4—35

(Sd.) வித்வான் மறை
திருநாவுக்கரசு,

---

ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக்கு என்னை அன்புடன் அழைத்து ஒரு விசேஷக்கூட்டமும் கூட்டி, எனக்குத் தலைமைப் பதவியும் அளித்து இவ்வித்தியாசாலையின் மாணவ மாணவிகளின் செம்மையான கல்விப் பயிற்சியையும் கலைப்பயிற்சியையும் நன்கு கவனித்து இன்புறச்செய்த நண்பர்களுக்கு யான் எப்பொழுதும் நன்றியுள்ளவனாவேன். இனிமையான தோற்றம், வசதியான கட்டிடம், தகுந்த உபாத்தியாயர்கள், குதூகலமுள்ள பெண்களும்

பிள்ளைகளும் நல்ல பேராதரவு அளிக்கும் போஷகர்கள், இவை யெல்லாம் பெற்று விளங்கிவரும் இப்பாடசாலையானது இவ்வூர் மக்களுக்கு அறிவையும் அருட்செல்வத்தையும் நிரந்தரமாகக் கொடுத்து உதவக்கூடுமென்பது என் துணிவு. இக் கலாசாலை ஹிந்துமத ஞானமும், சிறந்த அனுஷ்டானமும், உயரிய மனித வாழ்க்கையின் அடிப்படையாகிய பௌருஷமும், பெண்மைத் தன்மையும், ஆண்பாலருக்கும் பெண்பாலருக்கும் தனித்தனியே புகட்டிவந்து மேன்மேலும் உண்மையான சீரும் சோபையும் பெருமாறு கடவுளை வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

(Sd.) வே. ஸாரநாதய்யங்கார்,
Principal National College
Trichinopoly.
27—5—35.

---

இன்று சரஸ்வதி வித்தியாசாலையைப் பார்த்துக்களிப்படைந்தேன் நமது நாடு இன்றிருக்கும் நிலையில் இம்மாதிரி வித்தியாசாலைகளே பயனளிப்பவையாகும். மாணவர்கள் மிக உற்சாகத்தோடு காணப்படுகிறார்கள். மாணவிகள் சங்கீதம் மிகத் திறமையாகப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் கைத்தொழில், பின்னல், தையல்வேலைகள் மிக மெச்சத்தக்கவையாகும், மிக உற்சாகமாகவும் இருக்கிறார்கள். இவ்வித்தியாசாலையின் முன்னேற்றத்திற்கு இவ்வூர் சரஸ்வதி சங்க அங்கத்தினர்கள் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது போற்றத்தக்கதாகும். இவ்வித்தியாசாலையில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவ, மாணவிகளுக்கும் அச்சுக்கோர்க்கும் தொழிலும் கற்றுக்கொடுப்பது மிக உபயோகமானதாகும். இவ் வித்தியாசாலை அபிமானிகள் நன்முயற்சிக்கு எனது நன்றி உரியதாகுக.

(Sd) ராம. சுப்பிரமணியன்,
27—5—35.
"Social Home." 41, Tipran Toti Steet, Trichinopoly.

புதுவயல் சரஸ்வதி சங்கத்தின் பதினைலாவது ஆண்டு நான்காவது மாதக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததுபற்றி மனமகிழ்ச்சியடைந்து இப்பதவியைக்கொடுத்த சங்கத்தினர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சங்கத்தின் கிளையாகவிளங்கும் பள்ளிக்கூடத்து மாணவ மாணவிகளின் பாட்டுத்திறனும், படிப்பு மாண்பும் சம்பாஷணையின் அருமையும் பேச்சின் சிறப்பும் என் மனத்தைக் கவர்ந்தன. தேசமுன்னேற்றத்திற்கும், சமூக சீர்திருத்தங்களுக்கும் குடும்ப நிர்வாகங்களுக்கும் இன்னும் இதுபோன்ற அரிய பெரிய விஷயங்களுக்கெல்லாம் விருத்தியாவதற்கு இம்மாதிரியான சங்கங்களும் பள்ளிக்கூடங்களும் தேசிய முறையில் நடைபெறுவதுதான் முக்கியமான சாதனங்களாகும் இம் மாதிரி பல சத்சங்கங்களும் பாடசாலைகளும் நிகழவேண்டும். பொதுமக்களுடைய ஆதரவு அத்யாவசியமானதாகும். ஒவ்வொரு தாய் தந்தையர்களும் தம்தம் மக்களை அதிலும் தம் பெண்மக்களை முக்கியமாகப் படிக்கவைத்துப் பெண்களின் சமூகத்திற்கே பெரும் பெருமையையும் புகழையும் நிலைநாட்டவேண்டும். இச் சங்கத்தை மிகத்திறமையுடன் நடத்துபவர்களின் தேச பக்தியும் ஊக்கமும் உத்ஸாகமும் பாராட்டத்தக்கவை. வாணியின் பெயரால் வளரும் இச் சங்கமும் பாடசாலையும் மேன்மேலும் சிறந்து பலபுகழும் பெற்றுப் பல்லாண்டு வாழவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனடி வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

தேச சேவகி,

(Sd) வை. மு. கோதைநாயகி.

19—8—35.

ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தாரால் கொண்டாடப்பட்ட 67-வது மகாத்மா காந்தி ஜெயந்திக்கும் பதினன்காம் ஆண்டு ஐந்தாம் மாதக்கூட்டத்துக்கும் தலைமை வகித்துச் சேவைசெய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மேற்படி வித்தியாசாலையின் மாணவர்கள் சொற்றிறன், படிப்புத்திறன் முதலியவைகள் வளர்ந்தேறி வருவதோடு ஆசிரியர்களின் அருமையான ஊழியத்தையும் பாராட்டுகிறேன். இந்தக் கலாசாலையார் தேசியக் கல்வியை வளர்த்து நாட்டிற்கு புத்துணர்ச்சியுள்ள வாலிபர்களை உண்டுபண்ணி உதவுவார்களென்று நம்புகிறேன். இந்தப் பாடசாலை மேன்மேலும் வளர்ந்தேறி இதை ஸ்தாபித்தவர்கள் பெற்றோர்கள் குழந்தைகள் ஆக அனைவருக்கும் நன்மையை உண்டுபண்ணுமென்று மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

இப்படிக்கு,
(Sd) N. சுப்பிரமணியம்,
மதுரமித்திரன் ஆசிரியர்,
26—9—35.

---

இன்று நாங்கள் இருவரும் சரஸ்வதி வித்தியாசாலையை வந்து பார்த்து அங்கு நடைபெறும் காரியங்களைப் பார்த்து மிக்க சந்தோஷமடைந்தோம். நன்முறையில் நம் நாட்டில் நடைபெறுகின்ற சிலகலாசாலைகளில் இதுவும் சிறப்புற்று விளங்கிவருவதாகவே நினைக்கிறோம். இக்கலாசாலையில் பயிற்சிக்கப்பெறுவது மற்ற கலாசாலைகளும் பின்பற்ற நல்லவழியாக இருக்கிறது. இக் கலாசாலை மென்மேலும் விருத்தியடைந்துநீடுழிகாலம் நிலைபெற்றிருக்குமாறு ஈஸ்வரனைப்ரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு,
(Sd) அள. அரு. சோமனுதன் செட்டியார்,
" சேவு. லெ. ராம. நாராயணன்செட்டியார்.
18—10—35.

௩எ-வது

## தமிழ் மாகாண அரசியல் மகாநாடு,

## காரைக்குடி.

---

எண். ௬௮. தேதி 31-1-1936

புதுவயல் சரஸ்வதி வித்தியாசாலை மாணாக்கியர்கள் காரைக்குடியில் 1936 ஜனவரி 25, 26-தேதிகளில் நடந்த மகாநாட்டில் பெண் தொண்டர் படையினராயமர்ந்து பணியாற்றியதை மெச்சி இந் நன்மதிப்புத்தாள் அளிக்கப்பெற்றது.

மே. ராம. மே. மெய்யப்பன்,
வரவேற்புக் கமிட்டித் தலைவர்.

மு. காசிநாதன்,
தொண்டர் படைத்தலைவர்.

சா. கணேசன்,
பொதுக் காரியதரிசி.

நாஷனல் பிரஸ், கண்டனூர்,
ஹெட்டாபீஸ்:- பி. அழகாபுரி,
கீழச்சிவற்பட்டி.